## நிறைவுபெற்ற ஆய்வுத் திட்டங்கள்

**பேராசிரியர் பத்மினி சுவாமிநாதன்**

- *முதல் கட்ட ஆய்வு: உலகமயமாக்கச் சூழலில் பாலினம், சந்தை மற்றும் வாழ்க்கை: தென்னிந்தியாவில் முந்திரித் தொழில் (பன்னாட்டு சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சி நிறுவனம், லண்டன்)*

**முனைவர் எம். தங்கராஜ்**

- *தமிழக பஞ்சாயத்துகளில் தலித்துகள் (சி.எஸ்.டி.எஸ், புதுடில்லி மற்றும் உலக வங்கி)*

**முனைவர் எம். விஜயபாஸ்கர்**

- *இந்தியாவில் செய்தி பரவுதலின் தொழில்நுட்பங்கள்: வளரும் நாடுகளில் உழைப்புச் சந்தையின் பாதிப்புகள் (ஆசிய செய்தி ஸ்தாபன நிறுவனம், சிங்கப்பூர்)*

**முனைவர் கிருபா அனந்த்பூர்**

- *இந்தியாவில் முறையான மற்றும் முறைசாரா உள்ளூர் ஆட்சி (வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம், சசக்ஸ் பல்கலைக்கழகம்)*

**முனைவர் சி. இலட்சுமணன்**

- *தொலைக்காட்சியும், உலகமய மாதலும் (விக்டோரியா பல்கலைக் கழகம், ஆஸ்திரேலியா)*

**முனைவர் மோஅனா பகபதி**

- *வணிக இலகுவாக்கத்திற்கான நடைமுறைகள் (தொழில் மற்றும் வணிக அமைச்சகம், இந்திய அரசு)*

**பேராசிரியர் கே. நாகராஜ்**

- *ஏழைகளுக்கான உரிமையும் பிரதிநிதித்துவமும் (வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம், சசக்ஸ் பல்கலைக்கழகம்)*

**பேராசிரியர் உ. கி. நட்ராஜ்**

- *தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் மேற்கு வங்கத்தில் அதிகாரப் பகிர்மானம் (வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம், சசக்ஸ் பல்கலைக்கழகம்)*

## நிறைவுபெற்றுவரும் ஆய்வுத் திட்டங்கள்

**முனைவர் ஜி. எஸ். கணேஷ் பிரசாத்**

- *கர்நாடகாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து உறுப்பினர்களின் சாட்காம் பயிற்சித் திட்டம் பற்றிய மதிப்பீடு*
- *பாண்டிச்சேரி மாநில மனித மேம்பாட்டு அறிக்கை (மத்திய திட்டக் குழு)*

**பேராசிரியர் எஸ். ஜனகராஜன்**

- *உள்ளூர் நீர் மேலாண்மைத் திட்டம் மூலமாக ஆய்வு முடிவுகளின் வெளியீடு (நெகோவாட்) (டி.எஃப்.ஐ.டி., இங்கிலாந்து)*
- *செயலக ஊக்கியின் திறம்பட்ட செய்தித் தொடர்பு (ஐ.டி.ஆர்.சி., கனடா)*

**பேராசிரியர் பத்மினி சுவாமிநாதன்**

- *இரண்டாம் கட்ட ஆய்வு: உலகமயமாக்கச் சூழலில் பாலினம், சந்தை மற்றும் வாழ்க்கை: தென்னிந்தியாவில் முந்திரித் தொழில் (பன்னாட்டு சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சி நிறுவனம், லண்டன்)*
- *தமிழகத்தில் பெண்களின் நிலை பற்றிய ஆய்வு (மால்கம் மற்றும் எலிசபெத் ஆதிசேஷய்யா அறக்கட்டளை) (முனைவர் எஸ். ஆனந்தியுடனான கூட்டு ஆய்வு)*

**முனைவர் ஆ. இரா. வேங்கடாசலபதி**

- *தமிழ்நாடு: சூனியத்தில் அறிவுசார் தொலைநோக்குப் பார்வை (மால்கம் மற்றும் எலிசபெத் ஆதிசேஷய்யா அறக்கட்டளை)*

சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்திற்காக அதன் இயக்குனரால் வெளியிடப்பெறுவது.
79, இரண்டாம் பிரதான சாலை, காந்தி நகர், அடையாறு, சென்னை 600 020.
தொலைபேசி : 24411574/ 2589/ 2295/ 9771
தொலை நகல் : 0091-44-2491 0872 இணையம் : http://www.mids.ac.in
அச்சகம் : ரிலையன்ஸ் பிரிண்டர்ஸ், அடையாறு, சென்னை 600 020.

எம் ஐ டி எஸ்
சென்னை
வளர்ச்சி
ஆராய்ச்சி
நிறுவனம்

# வளர்முகம்

சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனச் செய்தி மடல்

நவம்பர் 2004 இதழ் 3

## ஆசிரியரிடமிருந்து. . .

வளர்ச்சி ஆய்வில் சிறந்த பங்களிப்புக்கான மால்கம் ஆதிசேஷையா விருது வழங்கப்படும் நாளில் வளர்முகம் வெளிவருகின்றது. இவ்வாண்டுக்கான விருது, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் சமூகவியல் பேராசிரியரான திபங்கர் குப்தாவிற்கு வழங்கப்படுகிறது. பேராசிரியர் குப்தா “இந்திய கிராமங்களின் அழிவுறு நிலை: கிராமப்புற வேளாண்மையும் நாகரீகமும்” என்ற தலைப்பில் விருதுச் சொற்பொழிவு வழங்க உள்ளார்.

ஆகஸ்டு 2004-ல் முனைவர் டி. ஜெயராஜ் பேராசிரியராக பதவி உயர்வு பெற்றார். இருப்பினும் கடந்த ஆண்டில் பேராசிரியர் நிர்மல் சென்குப்தா விருப்ப ஓய்வு பெற்று தற்போது ஐஜிஐடிஆர், மும்பையில் பணிபுரிவதாலும், முனைவர் மானபி மஜூம்தார் தமது பதவியிலிருந்து விலகி தற்போது கொல்கத்தாவிலுள்ள சி.எஸ்.எஸ்.எஸ்.-ல் சேர்ந்துள்ளதாலும் சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம் தனது சிறந்த இரு ஆராய்ச்சி அறிஞர்களை இழந்துள்ளது. இந்நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உதவிய இருவரையும் வளர்முகம் பாராட்டுகிறது. மேலும் பேராசிரியர் நிர்மல் சென்குப்தா இவ்வாண்டு செப்டம்பரில் தமது முயற்சியில் நடைபெற்ற “தகவல் தொழில் நுட்பமும் சமூக அறிவியலும்” என்ற கருத்தரங்கில் இடம்பெற்ற ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிடுவதற்கு மிகவும் உறுதுணையாக இருந்தார். இதேபோல முனைவர் மானபி மஜூம்தாரும் இந்தியாவின் மூன்று மாநிலங்களில் நடைபெற்றுவரும் சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தின் ஓர் ஒப்பீட்டு ஆய்வுத் திட்டமான “வட்டார ஆட்சியில் தன்னாட்சியுரிமை” என்ற ஆய்வுத் திட்டத்தில் முக்கிய பங்காற்றி வருகிறார்.

இந்த ஆண்டில் நான்கு ஆராய்ச்சி மாணவர்கள் முனைவர் பட்டத்திற்கான ஆராய்ச்சியாளர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். ஆராய்ச்சி மாணவர்களுக்கான இடப்பற்றாக் குறை அதிகரித்துள்ள போதிலும் அதிக மாணவர்களின் சேர்க்கை புதிய கோணங்களில் செரிய ஆராய்ச்சியினை மேற்கொள்ள உதவும்.

நமது நிறுவனத்தின் சொந்த முயற்சியில் மேற்கொள்ளப்பட்ட ஓர் மறுசீராய்வுக் குழு இந்த ஆண்டு ஆகஸ்டு கடைசி வாரத்தில் சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்திற்கு வருகை தந்து இங்குள்ள அனைத்து தரப்பு உறுப்பினர்களுடனும், கூட்டாகவும், தனித்தனியாகவும் கலந்து ஆலோசனை நடத்தினர். இக்குழுவின் உறுப்பினர்களாக பேராசிரியர்கள் ஆன்ரு பெட்லே, ஷீலா பல்லா மற்றும் மாலதி சோமய்யா ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். இக்குழுவினரின் ஆய்வறிக்கை நிறுவன ஆய்வாளர்கள் மற்றும் நிறுவன ஆட்சிக் குழுவினரிடையே விவாதிக்கப்பட உள்ளது.

முன்பு இருந்தது போலன்றி தற்போது நிலையாக மாநில மற்றும் இந்திய சமூக அறிவியல் ஆய்வு மன்றத்திடமிருந்து வர வேண்டிய மானியத்தொகை தொடர்ந்து கிடைத்து வருவதாலும், ஆய்வுத் திட்டங்கள் மூலம் கிடைக்கும் நிதியாலும் நிறுவனத்தின் தற்போதைய நிதி நிலைமை போதிய அளவு திருப்திகரமாக உள்ளது. தற்போது போர்டு நிறுவனத்தின் உதவியால் JSTOR என்ற ஆவணக்களரி வசதி நமது நூலகத்தில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. இதற்காக போர்டு நிறுவனத்திற்கு நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நமது நிறுவனத்தில் தமிழை நன்கு பயன்படுத்துவதற்கு முழுமையான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரு மொழிகளைக் கொண்ட பெயர்ப் பலகை ஏற்படுத்துதல் முதல் தமிழில் கடிதத்தொடர்பு மேற்கொள்ளுதல் வரை பல வழிகளிலும் இதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு அனைவரும் தமிழைப் பயன்படுத்த ஊக்குவிக்கப்படுகின்றனர். இருப்பினும் இன்னும் அதிக செயல்பாடுகள் செய்யவேண்டி உள்ளது. ஓர் முக்கிய அங்கமாக கடந்த ஆண்டில் தமிழில் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளது பெருமைக் குரிய விசயமாகும். இறுதியாக, தற்போதைய இயக்குநரின் பதவிக்காலம் வரும் ஆண்டு ஜனவரித் திங்கள் 31-ல் முடிவடைகிறது.

## உள்ளே. . .


| | |
|---|---|
| ஆசிரியரிடமிருந்து | 1 |
| நிறுவன ஆய்வாளர்களின் ஆராய்ச்சி | 2 |
| மால்கம் ஆதிசேஷையா விருது | 3 |
| கருத்தரங்குகள் | 6 |
| சிறப்புரை ஆற்றிய அறிஞர்கள் | 7 |
| ஆய்வுத் திட்டங்கள் | 8 |

## நிறுவன ஆய்வாளர்களின் ஆராய்ச்சி

திராவிடர் இயக்க வரலாற்றுடன் சமகாலத்திய ஆய்வு அடிப்படையிலான சாதி மற்றும் பாலினக் கருத்தாக்கங்களை இணைத்து முனைவர் எஸ். ஆனந்தி ஆய்வு செய்து வருகிறார். இவரது பெண்கள், வேலை மற்றும் கருக்கலைப்பு பற்றிய ஆய்வுக்கட்டுரை வெளியாகியுள்ளது. மேலும், திராவிட இயக்கத்தில் பெண்களின் நிலை பற்றி ஆய்வு முடிவுகளை வெளியிடுவதோடு தமிழ்நாடு மனித மேம்மபாடு அறிக்கை பற்றி ஓர் மாநாடு நடத்தியுள்ளார். தற்போது தனது முனைவர் பட்ட ஆய்வினை பதிப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதோடு பேராசிரியர் பத்மினி சுவாமிநாதனுடன் இணைந்து பெண்களின் படிப்பு நிலை பற்றி ஆராய்ந்து வருகிறார்.

முனைவர் அனந்த குமார் கிரி தனது ஆய்வுப்பணியான மாற்று வளர்ச்சியின் சாத்தியக்கூறுகள் பற்றிய படிப்பினை சார்ந்த முதன்மையான முன்னேற்றத் திறனாய்வினை தொடர்கிறார். இவர் ஆய்வு அடிப்படையிலான மத மறுமலர்ச்சியை உலகமயமாதல், அரசியல், ஒழுக்கவியல் முறைமை மற்றும் மாற்று ஆய்வு முறைகளின் அடிப்படையிலான தொகுதி நூல் ஒன்றை வெளியிட்டுள்ளார். அத்துடன், படைப்புத்திறனுள்ள சமூக ஆராய்ச்சி மற்றும் சமுதாய இயக்கங்கள் பற்றிய இரு தொகுப்பு நூல்களை உருவாக்கி வருகிறார்.

முனைவர் வி. சந்திரசேகர நாயுடு தமிழகத்தில் நிதியியல் தன்னுரிமை சார்ந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார். இதன் முடிவுகள் விரைவில் வெளிவர உள்ளது. மேலும் தமிழகத்தின் நிதி நிலைமை பற்றிய விரிவான ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளதோடு பல வேறு உயர் அமைப்புகளில் இதுபற்றிய பல சொற்பொழிவுகள் நிகழ்த்தி வருகிறார். தற்போது உலக வர்த்தக அமைப்பினால் இந்திய வேளாண்மையில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து ஆராய்ந்து வருகிறார்.

சசக்ஸ் பல்கலைக்கழக வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவன உதவியுடன் தொடங்கப்பட்டுள்ள நிதியியல் தன்னுரிமை திட்டத்தில் முனைவர் ஜி. எஸ். கணேஷ் பிரசாத் ஆய்வு மேற்கொண்டுள்ளார். இவர் மாநில மனித மேம்பாடு அறிக்கை தயாரிப்பு வரிசையில் பாண்டிச்சேரி பற்றிய குழுவில் இடம்பெற்றுள்ளார். மேலும், எம்.எஸ்.எஸ்.ஆர்.எப்—ன் தொடர்நிலை உணவுப் பாதுகாப்பு பற்றிய புத்தக உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகித்துள்ளார். தொடர்ந்து, கர்நாடக மாநில கிராம வளர்ச்சி மையத்தினால் நடத்தப்பட்ட தேர்வுபெற்ற கிராமப் பஞ்சாயத்து உறுப்பினர்களின் பயிற்சி வகுப்புகளின் மதிப்பீட்டில் பணியாற்றியுள்ளார்.

காவிரி குடும்பம் மூலமாக காவிரி நீர்ப் பகிர்வில் தமிழக மற்றும் கர்நாடக மாநிலப் பயனீட்டாளர்களிடையே அடிக்கடி ஏற்படவிருந்த தேவையற்ற சிக்கல்கள் மற்றும் மனக்கசப்புகளை நீக்கி சுமூகநிலையை உருவாக்க பேராசிரியர் எஸ். ஜனகராஜன் தொடர்ந்து முயன்று வருகிறார். மேலம் நீர் மேலாண்மை பற்றி ஆறுகள் இணைப்பு, தண்ணீரில் தனியார்மயம், குடிநீர்த் தட்டுப்பாடு மற்றும் நகர்சார்ந்த பகுதிகளில் நீர்ப் பிரச்சினைகள் குறித்து

‘அமிட்ஸ்டு’ என்ற மாதாந்திர விவாதக் கருத்தரங்கு கடந்த ஆண்டில் மிகவும் சிறப்பாக செயல்பட்டுள்ளது. பேராசிரியர் மு. ஆனந்தகிருஷ்ணன் – சுற்றுச்சூழல் ஆய்வியலாளர் மற்றும் வரலாற்றாசிரியர், திரு. எஸ். டி. பாஸ்கரன் – பொதுஉடைமை உழைப்பாளர் மற்றும் எழுத்தாளர், செல்வி வி. கீதா – கலைத் திறனாய்வாளர், திரு சதானந்த மேனன், திரு. சசிகுமார், இதழாராய்ச்சிக்கான ஏசியன் கல்லூரி, மற்றும் பேராசிரியர் எஸ். சிவக்குமார்– சென்னைப் பல்கலைக்கழகம் ஆகியோர் இக்கருத்தரங்கக் கூட்டத்தில் உரை நிகழ்த்தியுள்ளனர்.



## சிறப்புரை ஆற்றிய அறிஞர்கள்

- பேராசிரியர் வொய். சுப்பராயலு, *தமிழகத்தில் சமூக-பொருளாதார கட்டமைப்பு*, 10-11 நவம்பர் 2003
- முனைவர் இந்திரவேல் தாஸ்குப்தா, *வறுமையும் சமுதாயமும்*, 20 நவம்பர் 2003
- பேராசிரியர் ஜெ.பி.ஜி.திலக், *அரசு குடும்ப அமைப்பு மற்றும் கல்விச் சந்தை*, 21 நவம்பர் 2003
- பேராசிரியர் வொய். சுப்பராயலு, *வரலாறும் கல்வெட்டும்: ஓர் தொலை நோக்குத் திறனாய்வு*, 25 நவம்பர் 2003
- பேராசிரியர் பாசுதேப் குஹா-ஹாஸ்னோபிஸ், *பன்னாட்டு வர்த்தகமும் முன்னேற்றமும்*, 9 டிசம்பர் 2003
- முனைவர் மன்சூர் துராணி, *இஸ்லாமிய வங்கியியல் மற்றும் பணவியலின் முன்னேற்றம்*, 11 டிசம்பர் 2003
- முனைவர் அனிருத் கிருஷ்ணா, *வறுமையில் தப்பி ஏழ்மையாதல்: இராஜஸ்தான், குஜராத் மற்றும் மேற்கு கென்யா ஆய்வு முடிவுகள்*, 23 ஜனவரி 2004
- செல்வி கரென் கோயல்ஹோ, *பணித்துறை ஆட்சி சீர்திருத்தம் மற்றும் புதிய பொதுக்கருத்துச் சேவையில் நகர்ப்புற பொதுத்துறைப் பயன்பாடு*, 30 ஜனவரி 2004
- முனைவர் ராம்தூத் ஜட்டு, *முற்கால மற்றும் தற்போதைய இந்திய மொரீஷியன் உறவுகள்*, 16 பிப்ரவரி 2004
- பேராசிரியர் மார்டின் ஆர். தூர்ன்பாஸ், *ஐரோப்பா மற்றும் இந்தியாவில் தனித்துவமும் ஆற்றலும்: இயக்க ஆற்றல் பற்றிய சில ஒப்பீடு*, 17 பிப்ரவரி 2004
- திரு பென் போவிஸ், *நுழைநோக்குடைய அமைப்பிடம்: ஆந்திரப் பிரதேசத்தில் அடித்தள மக்களைப் பலப்படுத்துதலும் பங்கேற்றலும்*, 24 பிப்ரவரி 2004
- திரு பி.எஸ். பூஷன், *இந்தியாவில் உலகமயமாக்கலின் போக்கில் கட்டுமானத் தொழில்*, கட்டடக்கலை, 04 மார்ச் 2004
- முனைவர் பாலகிருஷ்ணன் இராஜகோபால், *சமுதாய இயக்கங்களில் எதிர்கால மனித உரிமைகள்*, 29 மார்ச் 2004
- பேராசிரியர் கிரிஸ் ஃபுல்லர் மற்றும் செல்வி ஹரிப்ரியா நரசிம்மன், *உலகமயமாக்கலில் நடுத்தர வர்க்கம்: சென்னையில் ஓர் சமூகவியல் விசாரணை*, 31 மார்ச் 2004
- பேராசிரியர் ரிச்சர்டு டேவிஸ், *இந்துமதக் கோட்பாடு யுகத்தில் இந்துமத போதனை*, 16 ஏப்ரல் 2004
- திரு ஜெ. குகானந்தன், *இனப்பெருக்க உரிமைகளின் இசைவிணக்க கலந்தாய்வு: தமிழகத்தில் பெண்கள் மற்றும் கருத்தடைப் பழக்கங்கள்*, 27 ஏப்ரல் 2004
- திரு கே.சி. பெல்லியப்பா, *இந்தியர்கள் ஏன் ஆங்கிலத்தில் எழுதுகிறார்கள்?*, 25 ஜுன் 2004
- முனைவர் மாதவ் ஜி. பதாமி, *இந்திய நகரப்போக்குவரத்தின் திருப்புமுனை*, 23 ஜுலை 2004
- முனைவர் பி.பி. ஆனந்த், *தண்ணீருக்கான உரிமைகளில் போட்டியும், சொற்பூசல்களும்*, 24 ஆகஸ்ட் 2004
- முனைவர் நிதிஷா கௌஎல், *பொருளியலும் தனித்துவமும்*, 25 ஆகஸ்ட் 2004
- முனைவர் ஜூடித் ஹெயர், *கோயம்புத்தூரில் நாட்டுப்புற உழைப்புச் சந்தை*, 01 செப்டம்பர் 2004
- பேராசிரியர் ஏ. மார்க்ஸ், *ஆட்சி முறையில் இந்துமதக் கோட்பாடுகளின் செயல்பாடு*, 16 செப்டம்பர் 2004

அருள்தந்தை அந்தோணிராஜ், முனைவர் ஆய்வு மாணவர், தனது ஆய்வுக்கட்டுரையான “கிராமப்புறத் தமிழகத்தில் குழந்தைத் தொழிலாளர் பற்றிய ஓர் ஆய்வு: தனி முக்கியத்துடன் ‘அறியஇயலாத குழந்தைத் தொழிலாளர்கள்’” மூலம் முனைவர் பட்டம் பெற்றார். இவரது மேற்பார்வையாளர் பேராசிரியர் டி. ஜெயராஜ்.

தாகும். தற்போது இவர் பாண்டிச்சேரி வளர்ச்சி அறிக்கை தயாரிப்பதற்கான திட்டத்தின் இயக்குநராக உள்ளார்.

*முனைவர் ஆ. இரா. வேங்கடாசலபதி*யின் தமிழகத்தில் விடுதலைக்கு முந்திய பண்பாட்டு வரலாற்றின் நெடிய ஆய்வில் உருவான ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை காபி மற்றும் புகையிலை நுகர்வு ஆகும். இவர் பண்பாட்டுக் கருத்தரங்குகளில் விடுதலைக்கு முந்திய தமிழகத்தில் பதிப்புப் பண்பாடும் சட்ட உருவாக்கமும் பற்றிய ஆய்வுக் கட்டுரை வெளியிட்டுள்ளதோடு, இது பற்றி எழுதியும் வருகிறார். இந்த ஆண்டு இவரது முக்கிய தமிழ்க் கதையின் மொழிபெயர்ப்பு வெளியாகி உள்ளது. தற்போது இவர் பண்பாட்டு வரலாறு பற்றிய கட்டுரைத் தொகுப்பினை உருவாக்கி வருவதோடு தனது முனைவர் பட்ட ஆய்வினை வெளியிடும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளார்.

*முனைவர் எம். விஜயபாஸ்கர்* லண்டனிலுள்ள ஓரியண்டல் — ஆப்பிரிகன் ஆய்வுப் பள்ளியில் சார்லஸ் வாலேஸ் வருகை ஆய்வாளராக இருந்துள்ளார். இவர் இங்கிலாந்திலுள்ள பல்வேறு ஆய்வு நிறுவனங்களில் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்ததோடு கருத்தரங்க விவாதங்களின் வல்லுநர் குழுவிலும் இடம்பெற்றிருந்தார். இவரது ஆய்வு வெளியீடுகளில், குறைந்த வருவாய் நாடுகளில் உயர்தொழில்நுட்ப இயக்க நிலைக் கட்டுப்பாடுகள் மற்றும் ஐ.சி.டி.க்களில் உழைப்புச் சந்தையின் தாக்கம் ஆகியவை முக்கியமானதாகும். இவர் தற்போது சுற்றுவட்டார பொருளாதார மையங் களில் நெகிழ்வுக் குவிப்பு பற்றிய தனது முனைவர் பட்ட ஆய்வினை வெளியிடும் முயற்சியில் உள்ளார்.

**ஜெ.எஸ்.டி.ஓ.ஆர்., என்ற ஓர் மின்னனு ஆவணக்களரி மூலம் ஏறத்தாழ 300 முக்கிய சமூக அறிவியல் ஆராய்ச்சிப் பத்திரிகைகளை ஆராயும் வண்ணம் சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவன நூலகத்தில் இவ்வாண்டு தொடங்கப்பட்டுள்ளது.**

## கருத்தரங்குகள்

- *இந்தியாவின் பல்நோக்குப் பார்வையில் மக்களியல், சமூகப் பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழலின் எதிர்காலம்* என்ற தலைப்பிலான வெல்கம் டிரஸ்ட் நிறுவனத்தின் நிதிஉதவியுடன் கூடிய திட்டம் பற்றிய ஓர் கருத்தரங்கு 8 ஜனவரி 2004–ல் நடைபெற்றது. மேலும் இக்கருத்தரங்கில் இருபத்து ஓராம் நூற்றாண்டில் இந்தியா: மக்கள் தொகை, பொருளாதாரம் மற்றும் சுற்றுச் சூழல் என்ற ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தின் புத்தகம் வெளியிடப்பட்டது.
- *இந்தியா மற்றும் பிரேசிலில் மக்களாட்சிப் பரவல்முறை பரிசோதனை*– ஓர் கருத்துப் பட்டறை, 31 ஜனவரி 2004.
- *ஆக்கச்சொல் வளர்ச்சியில் தென் இந்திய வரலாறு: தொடக்க கால தமிழ் (பிராமி) எழுத்துக்களும் தற்கால தொல்லியல் கண்டுபிடிப்புகளும்* – கருத்தரங்கு. ஒருங்கிணைப்பாளர்: மால்கம் ஆதிசேஷய்யா வருகைப் பேராசிரியர் சுப்பராயலு, 6–7 பிப்ரவரி 2004.
- *தமிழ்நாடு மனித மேம்பாடு அறிக்கை பற்றிய மதிப்பாய்வு*, ஒருங்கிணைப் பாளர்: முனைவர் எஸ். ஆனந்தி. 12 மார்ச் 2004.
- *இந்தியாவில் வர்த்தக ஊக்குவிப்பு நடவடிக்கைகள் பற்றிய கருத்தரங்கு*, ஒருங்கிணைப்பாளர்: மால்கம் ஆதி சேஷய்யா இருக்கைப் பேராசிரியர் நிர்மல் சென்குப்தா மற்றும் முனைவர் மோஅனா பகபதி, 31 ஆகஸ்டு 2004.
- *தகவலறிவிப்பின் தொழில்நுட்பமும் சமூக அறிவியல் ஆய்வும்*, ஒருங்கிணைப்பாளர்: மால்கம் ஆதிசேஷய்யா இருக்கைப் பேராசிரியர் நிர்மல் சென்குப்தா மற்றும் முனைவர் ஜி.எஸ். கணேஷ்பிரசாத், 18 செப்டம்பர் 2004
- *தீபகற்ப இந்தியாவில் சமூக – பொருளாதார கோணங்களிலான பாதுகாப்பு*, ஒருங்கிணைப்பாளர்: முனைவர் மோஅனா பகபதி, 29–30 அக்டோபர் 2004.



ஆய்வுகள் மேற்கொண்டுள்ளதோடு இவை பற்றி விரிவாக எழுதியும், சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் வருகிறார்.

*பேராசிரியர் டி. ஜெயராஜ்* பேராசிரியர் எஸ். சுப்பிரமணியனுடன் இணைந்து, மக்கள் தொகையின் வயது அமைப்பு, பெண்கள் நலனுக்கும் பிறப்பிலேயான பால் விகிதாச்சாரத்திற்கும் இடையே உள்ள தொடர்பு, சமத்துவமின்மையில் செங்கோட்டு நிலைக்கும் கிடைக் கோட்டு நிலைக்கும் இடையே உள்ள இணைப்பு மற்றும் சமீபத்திய மத அடிப்படையிலான மக்கள் தொகைக் கணக்கில் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகள் பற்றி ஆய்வுகள் மேற்கொண்டுள்ளார். மேலும், இவர் பேராசிரியர் சுப்பிரமணியனோடு இணைந்து முன்னர் மேற்கொண்ட ஆராய்ச்சி முடிவுகளை பதிப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

*முனைவர் கிருபா அனந்த்பூரின்* அதிகாரபூர்வமான மற்றும் பாரம்பரிய உள்ளாட்சி அமைப்புகளுக்கான திட்டம் பற்றிய ஆய்வு இவ்வாண்டும் தொடர்கிறது. இவர் தனது தற்போதைய ஆய்வுகளிலிருந்து இங்கிலாந்து மற்றும் தென் ஆப்பிரிக்காவில் ஆய்வுக் கட்டுரைகள் வழங்கியுள்ளார். மேலும் இவர் எஸ்.ஐ.ஆர்.டி. அமைப்பினால் நடத்தப்பட்ட தேர்வு பெற்ற கிராமப் பஞ்சாயத்து உறுப்பினர்களின் பயிற்சி வகுப்புகளை மதிப்பீடு செய்துள்ளார். சென்னைப் பல்கலைக் கழக மாணவர்களிடையே பேரளவு செய்தித் தொடர்பின் முன்னேற்றம் குறித்து உரை நிகழ்த்தியுள்ளார்.

*முனைவர் சி. இலக்ஷ்மணன்* இந்தியாவில் அரசியல் பண்பாடு குறிப்பாக தமிழகத்தின் நிலை என்ற கருப்பொருளில் ஆய்வினைத் தொடர்கிறார். மேலும், ஆஸ்திரேலியாவின் விக்டோரியா பல்கலைக்கழக உதவியுடனான ஆராய்ச்சித் திட்டத்தில் சமுதாயத்தில் பொதுசன ஊடகங்களின் தாக்கமும் அதன் விளைவுகளும் பற்றி கவனம் செலுத்தி வருகிறார். இந்திய தனியார் துறையில் கூட்டாண்

## மால்கம் ஆதிசேஷையா விருது

2004-ம் ஆண்டுக்கான மால்கம் ஆதிசேஷையா விருது பேராசிரியர் திபங்கர் குப்தாவிற்கு வளர்ச்சி ஆராய்ச்சியில் அவர் ஆற்றியுள்ள பல்வேறு சிறப்புமிக்க பணிகளுக்காக வழங்கப்படுகிறது. இந்தியாவின் சமுதாய அமைப்பு முறை மற்றும் மாறுபாடுகள் நிறைந்த சிக்கல்களைப் பற்றிய இவரது ஆய்வு மிகவும் சிறப்பிடம் வாய்ந்ததாகும். இந்தியாவின் தனிச் சிறப்புமிக்க சமுதாய அடுக்குமுறையோடு மாறுகின்ற சமுக-அரசியல் சூழ்நிலைகளுக்கேற்ப தன்னை மாற்றிக்கொள்ளும் திறன் கொண்ட அதன் போக்கு பற்றி சிக்கலற்ற முறையில் எளிதில் தெளிவுகாணும் வகையில் இவரது ஆய்வு உள்ளது.

மதச்சார்பற்ற சமுதாயமுறை மற்றும் நவீனமயமாதலினால் உருவாகுகின்ற விளைவுகளினால் ஏற்படுகின்ற சமுதாய மாறுதல்கள் பற்றி குப்தா மிக விரிவாகவும், அறிவுபூர்வமாகவும் ஆராய்ந்துள்ளார். இவரது படைப்புகளின் முக்கிய மையமாக விளங்குவது, திறனாய்வாளர்கள் நோக்கிலிருந்து ஆய்ந்து சமுதாயம் பற்றிய புதுவலுவூட்டுகின்ற கருத்துக்களோடு உண்மையை உணர்த்துகின்ற அறிவுக் கூர்மையாகும். உலக முழுவதுமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு மேற்கோள் காட்டப்பெற்ற கருத்தான சமுதாய படிநிலை அமைப்பிலுள்ள ஒரு சாதியினர் லுெத்தும் அதிகார ஆட்சிமுறை அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு வரும் நிலையை இவர் உறுதியாக மறுப்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இவரது ஆய்வின்படி சமுதாய படிநிலையிலுள்ள பல்வேறு சாதியினர் செலுத்தும் அதிகார நிலை எடுத்துக்காட்டுகள் மூலம் தெளிவுபடுத்தப் பட்டுள்ளது.

நடைமுறை நிலைமைக்கும் போலியான வாத நுணுக்கம் சார்ந்த கருநிலைக் கோட்பாட்டிற்கும் இடையே உள்ள தொடர்பை குப்தா தனது படைப்புகளில் உயிரோட்டமாக விளக்குகிறார். இதனடிப் படையில், இவர் எவ்வித தவறான கருத்துத் தூண்டுதல்களையும் ஏற்படுத்தாமல் சமுதாயத்தின் சாதி அமைப்பினை ஒன்றோடொன்று இணைக் காமல், தனிவகையாக நோக்குவதோடு அத்தனித் தன்மையுடைய தொகுதி ஒவ்வொன்றிலும் பல்வேறு சமுதாய படிநிலை அமைப்பு உருவாகியுள்ளதை மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிறார். இவரது மற்ற ஆராய்ச்சிப் படைப்புகள் இந்தியாவில் ஏற்பட்டு வரும் பல்வேறு சமுதாய மாறுதல்களுக்கான முக்கியத்துவத்தை சிறப்புற வலியுறுத்துவதோடு சமுதாயத்தின் மாறாநிலை பற்றி பிராமணர்களால் உருவாக்கப்பட்ட பழமைக்கூற்றின் தாக்கம் குறைவதனை எடுத்தக்காட்டுகளுடன் விளக்கியுள்ளார்.

இந்திய “சமூகவியலுக்கான வழங்கல்கள்” பத்திரிகையின் பதிப்பாசிரியராகவும், லண்டன் பொருளாதாரப் பள்ளி, டொராண்டோ பல்கலைக் கழகம் மற்றும் ஸ்ராபர்க் பல்கலைக்கழக மையங்களில் வருகைப் பேராசிரியராகவும் இவர் உள்ளார்.

மையுடனான சமுதாயப் பொறுப்பும் இடஒதுக்கீடும் பற்றிய விவாதத்திலும் பணியாற்றுகிறார். இவரது ஆய்வு இந்தியக் குடியாட்சியும் மனித உரிமை நடைமுறைகளும் பற்றிய விவாதத்திற்கு உறுதுணையாகவும் உள்ளது.

*முனைவர் மோஅனா பகபதி* இந்தியாவில் வர்த்தக ஊக்குவிப்பு நடவடிக்கைகள் பற்றிய ஓர் கூட்டு ஆய்வினை பேராசிரியர் சென்குப்தாவுடன் இணைந்து செய்து வருகிறார். இந்திய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சகத்தின் நிதி உதவியால் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த ஆய்வு முடியும் நிலையில் உள்ளது. இவ்வாராய்ச்சியின் அடிப்படையில் இரு இடைக்கால அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளதோடு, இந்தியா வளர்ச்சி ஆய்வு அறிக்கை2004—ற்கு வர்த்தக ஊக்குவிப்பு என்ற கட்டுரையினை இணையாசிரியராக தயாரித்துள்ளார். மேலும் தீபகற்ப இந்தியாவில் சமூக பொருளாதார கோணங்களிலான பாதுகாப்பு என்ற ஓர் கருத்தரங்கினையும் இவர் நடத்தியுள்ளார்.

*பேராசிரியர் கே. நாகராஜ்* தமிழகத்தில் ஒப்பந்த அடிப்படையிலான தோட்டத் தொழிலாளர் சந்தை பற்றிய ஆய்வினை நிறைவு செய்துள்ளார். உரிமைகளும் பிரதிநிதித்துவமும் என்ற ஆய்வில் இந்தியாவின் ஜனநாயகப் பிரதிநிதித்துவத்தின் மூலமாக எந்த அளவு அரசுக் கொள்கை உருவாக்கத்தில் ஏழைகளின் குரலுக்கு இடம் உள்ளது என்பது பற்றியும் ஆய்வு செய்து வருகிறார். இடர்பாடு குறித்த ஓர் பயிற்சி வகுப்பினை இவர் சென்னையிலுள்ள ஏசியன் இதழாராய்ச்சிக் கல்லூரியில் வழங்கியுள்ளார். ஆந்திரப் பிரதேச அரசு அமைத்துள்ள 'வேளாண்மை நிலை' பற்றிய குழுவில் இவர் உறுப்பினராகவும் செயல்பட்டு வருகிறார்.

*பேராசிரியர் உ. கி. நட்ராஜ்* சசக்ஸ் பல்கலைக்கழக வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தின் உதவியுடன் தொடங்கப்பெற்ற தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் மேற்குவங்கத்தில் அதிகாரப் பகிர்மானம் பற்றிய ஆய்வுத் திட்டத்தின் முதன்மை ஆய்வாளராக உள்ளார். இந்த ஆய்வு முடியும் நிலையில் உள்ளது. சாதியும், தற்காலநிலையும் குறித்து பல்வேறு உரையாடல்கள் மற்றும் சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளதோடு இவை பற்றிய ஆய்வுக் கட்டுரைகளையும் இவர் வெளியிட்டுள்ளார். மேலும் கர்நாடக அரசின் எஸ்.ஐ.ஆர்.டி.—ன் மூலமாக செயல்பட்டுவரும் கிராம சபை உறுப்பினர்களின் விவாதங்களின் பங்குகொள்ளும் வல்லுநர்குழுவில் உறுப்பினராகவும், கிராமசபை உறுப்பினர்களின் பயிற்சி பற்றிய மதிப்பீட்டு ஆய்விலும் இவர் ஈடுபட்டுள்ளார்.

*பேராசிரியர் பத்மினி சுவாமிநாதன்* முந்திரி அளிப்பு நிலையில் வாழ்க்கைத் தரத் தாக்கம் குறித்த இரண்டாம் கட்ட ஆய்வினைத் தொடர்ந்துள்ளார். இவ்வாராய்ச்சியின் முடிவுபெற்ற ஒரு பகுதி வெளியிடப்படுட்டுள்ளது. இவர், இந்தியாவில் வறுமையின் தன்மை மற்றும் கூலிவேலையால் பெண்களுக்கு ஏற்படும் சுமை குறித்த தனி வரைவு நூலினை வெளியிட்டுள்ளார். தமிழகத்தில் மதிய உணவுத் திட்டம் பற்றிய ஆய்வினை நிறைவு செய்து அதனை வெளியிட்டுள்ளார். இவர் தற்போது கூட்டாக இணைந்து தமிழகத்தில் பெண்கள் மாதவிடாய் பற்றிய ஆய்வுகள் குறித்து திறனாய்வு செய்து வருகிறார். இது பெண்கள் ஆய்வு பற்றிய இந்திய சங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட ஓர் பெரிய ஆய்வாகும். இதற்கு மால்கம் மற்றும் எலிசபெத் ஆதிசேஷய்யா அறக்கட்டளை உதவி வழங்குகிறது.

### முனைவர் பட்ட ஆய்வு மாணவர்கள் 2003

குமாரி ஆன் ஜார்ஜ்: *நலவாழ்வு குறித்த நடைமுறை ஆய்வு.*

குமாரி ஜெயஸ்ரீ: *பொதுக்கொள்கை வாயிலான உயர்திறன்.*

திரு எஸ். குமரன்: *தமிழகத்தின் பொதுச் செலவினங்கள்: சமூக நலத்துறை பற்றிய ஓர் ஆய்வு.*

திரு. ராஜ்கிஷோர் மகானா: *பன்டோ மேட்டுநில உடைமையாளர்களின் திருப்புமுனை, முன்னேற்றமும் மாற்றமும்: ஓர் திறனாய்வு மற்றும் முறையீடு.*



*பேராசிரியர் பு. இராதாகிருஷ்ணன்* கல்வியும் உடன்பாட்டு செயல்முறையும் குறித்து ஆய்வு செய்வதோடு இவை பற்றிய ஆய்வுக் கட்டுரைகளை கருத்தரங்குகளில் சமர்ப்பித்துள்ளார். இவர் சமயமும் உலகமயமாதலும் பற்றியும் எழுதியுள்ளார். இவர் தற்போது இந்தியாவின் புறஅதிர்ச்சி நிலையின் நிலைமாற்றம் குறித்து ஓர் ஆய்வுப் புத்தகத்தினை பதிப்பித்து வருவதோடு, இவரது உடன்பாட்டு செயல்முறையும் இந்தியாவின் மனிதவள மேம்பாடும் குறித்த ஆய்வினை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

நீர்வள மேலாண்மையின் பல்வேறு பரிமாணங்கள் பற்றிய ஆராய்ச்சியில் *முனைவர் கி. சிவசுப்பிரமணியன்* ஈடுபட்டுள்ளார். வேளாண்மையில் நீர் நிர்வாகத் திறன் மற்றும் ஏரிப்பாசனம் குறித்து ஆங்கிலம் மற்றும் தமிழில் ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்டுள்ளார். மேலும், இவை பற்றிய கருத்தரங்குகளில் கலந்துகொண்டதோடு, உரையாடல்களிலும் ஈடுபட்டுள்ளார். தற்போது கௌரவப் பேராசிரியர் அ. வைத்தியநாதனுடன் இணைந்து இந்திய வேளாண்மையில் நீர் பயன்பாட்டுத் திறன் பற்றி ஆய்வு செய்துள்ளதோடு இந்தியாவிலுள்ள பெரிய மாநிலங்களில் நீர்ப்பாசன மற்றும் மானாவாரி நிலங்களின் உற்பத்தித்திறன் பற்றிய மதிப்பீட்டு ஆய்வில் ஈடுபட்டுள்ளார்.

*பேராசிரியர் எஸ். சுப்பிரமணியன்* ஹெல்சிங்கியின் 'வைடர்' அமைப்பில் வருகைப் பேராசிரியராக பணியாற்றி பல ஆய்வுக் கட்டுரைகளை யு.என்.யு—வைடர் ஆராய்ச்சி அறிக்கைத் தொடரில் வெளியிட்டுள்ளார். இவ்வாண்டின் அவரது மற்ற ஆய்வுப் பணியான 'படிப்பறிவின் அளவுகோல்' பற்றிய கட்டுரை வளர்ச்சிப் பொருளாதார ஆய்வுப் பத்திரிகையில் வெளியானது இவரது நலப்பொருளியலின் தொடர் ஈடுபாட்டிற்கான சான்றாகும். இவர் தனது முந்தைய ஆய்வுப் பணிகளின் தொகுதியை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதோடு, பேராசிரியர் ஜெயராஜ் உடன் இணைந்து மேற்கொண்டுள்ள ஆய்வும் தொடர்கிறது.

## நிறுவனர் நாள் சொற்பொழிவு

**இந்த ஆண்டு முதல் நிறுவனர் நாள் சொற்பொழிவு வழங்கப்படுகிறது. இது வரையா வள்ளான்மையும், உயரிய தொலை நோக்குப் பார்வையும் கொண்ட நமது நிறுவனர் முனைவர் மால்கம் எஸ். ஆதிசேஷய்யா அவர்களுக்கு நாம் அளிக்கும் நன்றிக் கடனாகும். புகழ்பெற்ற எழுத்தாளரும், திறனாய்வுப் பேராசிரியருமான யு.ஆர். அனந்த மூர்த்தி "உலகமயமாதலும் இந்திய கலாச்சாரத்தில் அதன் வியத்தகு நிகழ்வுகளும்" என்ற கருப்பொருளில் உரை நிகழ்த்தினார். இவர் கோட்டயத்திலுள்ள எம்.ஜி.பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தரும், மைசூர் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத்துறைப் பேராசிரியரும் மற்றும் சாகித்ய அகாடமியின் தலைவரும் ஆவார். ஆண்டுதோறும் இதுபோன்ற நிகழ்வு சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற உள்ளது. இவ்வாண்டு பல்வேறுதரப்பட்ட முன்னணித் தமிழ் எழுத்தாளர்களும் இதில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.**

சென்னைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதார படிப்பிற்கான முனைவர் அம்பேத்கார் மையத்தில் தற்போது பணிபுரியும் *முனைவர் எம். தங்கராஜ்* அரசியல் சார்ந்த நில உடைமைச் சீர்திருத்தம் பற்றிய தொகுப்பு நூலினை வெளியிட் டுள்ளார். அடுத்து, புது டில்லியிலுள்ள சி.எஸ்.டி.எஸ்.—ன் உதவியினாலான ஆய்வில், தமிழக பஞ்சாயத்துக்களில் தலித்துகள் பற்றிய இவரது ஆய்வறிக்கை முக்கியமான